உ

சுபமஸ்து.

சமுத்ரயாத்ராவிசாரம்.

இது

பல பண்டிதர்களின் அநுமதியைப் பெற்று

தரும சாஸ்திரக் கருத்தைத் திரட்டி

கும்பகோணம் காலெஜ்

S. நாராயணசாமி ஐயரவர்களால்

தமிழில்

வசன நடையாக எழுதப்பட்டு

ஸாது. சேஷையரவர்களால்

பிரஸித்தஞ்செய்யப்பட்டது.

கும்பகோணம்

ஜி. வே. ப. கிருஷ்ணசெட்டியார் அவர்களது

"லார்ட்ரிப்பன் அச்சாபிஸில்"

பதிப்பிக்கப்பட்டது.

விரோதி-ஷு புரட்டாசிமீ.

சுபமஸ்து.

முகவுரை.

இச்சிறுபுத்தகம், கும்பகோணம் போர்டர் டவுன் ஹாலில் எனது நண்பர் மகா-௱-௱-ஸ்ரீ எஸ்- நாராயணசாமி ஐயரவர்கள் செய்த பிரசங்கத்தின் பிரதிரூபம்; இது பல நண்பர்களின் விருப்பத்தை அநுசரித்து என் வேண்டுகோளின்படி மேற்படியாரால் பல தர்மசாஸ்திரபண்டிதரின் உதவியைக்கொண்டெழுதப்பட்டது. இதில் சமுத்திரபாத்திரையால் துவிஜர்களுக்குண்டாகும் தோஷமும் அதன் நிவாரகமும் கூறப்பட்டுள்ளன. இப்புத்தகத்தில் இவ்விஷயத்தைப்பற்றியுள்ள கருத்து, பல தர்மசாஸ்திரவித்வான்களின் அபிப்பிராயத்திற்கு ஒத்திருப்பதே. இஃதன்றி இப்புத்தகத்தில் தத்காலத்து வழங்கிவரும் மானவ யாஜ்ஞவல்கிய பராசர ஆபஸ்தம்ப கௌதம போதாயனாதி தர்மசாஸ்திரங்களின் முடிவான கோட்பாடுகளே அமைந்துள்ளன.

இச்சாஸ்திர விசாரத்திற்கு இப்பொழுது எம்மைத் தூண்டியது யாதெனின், சொற்பகாலத்திற்குமுன் சமுத்திரயாத்திரை நேரிடப்பெற்ற மகா-௱-௱-ஸ்ரீ அகிலாண்டையரவர்களின் குமாரன் குமாரத்திகளுக்கு ஸ்ரீமத் ஸ்ரிங்கேரிமடத்தாரால் விதிக்கப்பட்ட பிராயச்சித்தமே. பெரியோரால் விதிக்கப்பட்டதை ஆக்ஷேபித்துப்பேசுவது சாஸ்திரமுறையன்று; ஆயினும் இரண்டோரிடங்களில் ஆக்ஷேபம் பிறந்ததால் மூலசாஸ்திரங்களை ஆராயப்புகுந்தனம். யானும் என் நண்பரும் இவ்வித ஆராய்ச்சிக்குத் தொடங்கியது ஷை சுவாமியவர்களிடத்து விசுவாசக்குறைவினாலன்று; பக்திக்குறைவினாலுமன்று. அவர்கள் அபிப்பிராயத்தையும் கும்பகோணம் சுவாமிகள் அபிப்பிராயத்தையும் சிரமேற்கொண்டு, அவற்றிற்கு எதிர்வாதம் செய்வோர்க்குச் சாஸ்திரத்திற் சிறிதேனுமாதாரமுளதோவென்று ஐயமறத்தெளிந்துணர்ந்து சாஸ்திரச்சிரத்தையுள்ளோரும் அதன் பரிசோதனைக்கு அவகாசமில்லாதவருமாகிய பிறருக்கு உண்மையைத் தெரிவிக்கவேண்டிநக்குயே எம்மாலியன்றது செய்யப்புகுந்தனம். சமுத்திரயாத்திராதோஷ விஷயமாய்ச் சாஸ்திரத்தில் உள்ளனவெல்லாம் ஒருவாறு திரட்டி இப்புத்தகத்திற் கூறப்பட்டுள்ளன.

சுவாதந்த்ரியமில்லாத அஜ்ஞானதசையிற் சம்பவிக்கும் தோஷம் பெருந்தோஷமாகாது; அல்பதோஷத்திற்கு இடமிருப்பினும் அது பிராயச்சித்தத்தால் நீங்கக்கூடியதேயென்பது சாமானியருக்கும் எளிதில் விளங்கக்கூடியதாயிருக்க நிஸ்ஸந்தேகமான இவ்விஷயத்திற் கக்ஷிபேசவும் காரணமுளதோ அறியேம். பிராஹ்மண்யத்தை நிலைநிறுத்துவதற்காக இக்கக்ஷியெனின் அவ்வாறு எண்ணவும் இடமில்லை; ஏனெனின் தன் பாபத்திற்கு மிகப்பச்சாத்தாபத்துடன் பரிகாரம் தேடுபவனுக்கிரங்காது அவனை நீக்கக் கருதுவது பிராஹ்மண்யத்தை நிலைநிறுத்துவதன்று. தமக்குச் சௌகரியமென்று தோன்றுவதையே பிரமாணமா

கக்கொண்டு சிலர் பாபத்திற்கஞ்சாது நடந்துவருவதைத் தினந்தோறும் கண்ணுற்றிருந்தும் அவரை ஒருவிதத்திலும் கண்டியாது நிற்றலும் பிராஹ்மண்யத்தை நிலைநிறுத்துவதாகாது. அவ்வாறு பிராஹ்மண்யத்தை நிலைநிறுத்துவேமெனக் காட்டுவோர், பிராஹ்மணருக்குக் கொலைசெய்தல், திருடுதல், அசத்தியம் பேசுதல், சுராபானஞ்செய்தல் முதலியவை பாதகங்களேயல்லவென்று எண்ணுபவர்போல் அவற்றிற்காக ஒருவிசாரமுமின்றி அறியாப்பருவத்திற் கப்பலிற் போவது எல்லாவற்றிலும் கொடியபாபமெனத் தோன்றுமாறு அவ்விஷயத்தில் மிக்ககடுமையாயிருப்பது எந்தச்சாஸ்திர ஆதாரத்தாலோ அறியேம்.

இதுநிற்க, வைதிகர்களிற் பெரும்பான்மையோர் வைதிகக் கிரியைகளை மந்திரம் ஒருவாறு கற்றவரன்றித் தர்மசாஸ்திரத்தையே பாராதவர். இத்தன்மையராகிய வைதிகர் சொல்வதையே தர்மசாஸ்திரமென மயங்கிச் சாஸ்திரமறியாதசிலர் தவறிப்போகின்றார்கள். நாம் விசாரித்த அளவில் தர்மசாஸ்திரபண்டிதர்களின் அபிப்பிராயமெல்லாம் ஒருவகைப்பட்டதாகவே இருக்கின்றது. அவ்வபிப்பிராயம் இப்புத்தகத்திலடங்கியதேயாம். வேறு அபிப்பிராயமுண்டெனின் அதைச் சாஸ்திரஆதாரத்துடன் கேட்க ஆவலோடிருக்கின்றனம். எவ்விதத்திலாவது நம்முடைய தர்மசாஸ்திரங்களைப் பலர் அறியமுயன்றாலே நமக்குப் பெரும்பயனாம்.

இப்புத்தகத்தின் தலைப்பிலெழுதப்பட்டுள்ள "அந்தண ரென்போ ரறவோர் மற் றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுக லான்" என்ற திருக்குறளிற் சொல்லியதைப் பிராஹ்மணரெனப் பெயர்படைத்த நாமெல்லாம் எப்பொழுதும் கருத்தில்வைக்கவேண்டும்; அதாவது பிராஹ்மணருக்குப் பெரியவிரதம் ஜீவகாருண்யமே என்பது. அதைவிட்டால் நமது காரியமெல்லாம் பயனில்லாதனவேயாம். மாயூரத்திற்கூடிய ஒருசபையில் ஸ்ரீமத் ஸ்ரீங்கேரிசுவாமிகள் "கருணைபாராட்டி இப்பிராயச்சித்தம் விதித்தார்" என்று ஒரு சிறந்தபண்டிதர் கூற, வேறொருவர், அக்கருணையே மிகத்தோஷமெனப் பலர் எண்ணும்படி அதை இகழ்ந்து பேசினர். இதைக்கேட்டவுடன் பிராஹ்மண்யத்தின் கதி இவ்வாறாயிற்றே, இனி நமக்கு மீட்சியாதோவென்று எம்மனம் மிக ஏங்கிவருந்தியது. அவ்வாறு இகழ்ந்தவரும் சாவதானமாய் இப்புத்தகத்தைப் படித்துத் தம்முடைய துரபிப்பிராயத்தை மாற்ற முயலுவாரென்று நம்புகிறோம்.

மனு சொன்னபடி, மனிதனுக்குக் குருவும் உத்தமமான சாட்சியும் அவனுடைய அந்தராத்மாவேயாகையால் அதை இகழக்கூடாது. அவ்வாறு மனச்சாட்சிக்கொப்பாக நடுநிலைமையில் நின்று நியாயத்தை எல்லோரும் விசாரிப்பாராக.

கும்பகோணம்.
விரோதி-௵
புரட்டாசி௴

ஸாது. சேஷையர்.

சுபமஸ்து

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்."

குடம்பகோணம் போர்டர் டவுன் ஹாலில் 1889-ம் ஸ்ரீ ஜூலை மீ 28௨ ஞாயிற்றுக்கிழமை ஸாயங்காலம் பரதந்த்ராவஸ்தையில் இரண்டு பிராமணக்குழந்தைகளுக்கு நேரிட்ட சமுத்திரயாத்திரையைப்பற்றி நடந்த பிரசங்கம்:—

குழந்தைகளின் விருத்தாந்தம்.

தங்கள் தாய்தந்தையர்கள் பிராமணநெறியிலேயே இருந்தகாலத்துப் பிறந்த ஒரு புருஷக்குழந்தையும் ஒரு பெண்குழந்தையும் அதிபாலியாவஸ்தையில் அத்தாய்தந்தையர்களுடன் இவ்விடத்தினின்றுங் கப்பலேறிச் சமுத்திரயாத்திரை செய்து சீமைக்குச் (லண்டன்) சென்றார்கள். பின்பு அவர்களுடன் இவ்விடத்திற்குத் திரும்பிவந்தகாலத்துச் சிறுவனுக்குப் பிராயம் ௧௦; பெண்ணுக்குப் பிராயம் ௫. இவ்விடத்திற்கு வந்தபின்னரும் ௪--௫ வருஷகாலம் தாய்தந்தையர்களின் ஆதீனத்திற்குனேயிருந்து தமக்குச் சற்று அறிவுவந்தவுடன், அக்குழந்தைகளிருவரும், "நாம் பிராமணகுலத்தில் ஜநித்தும் பிராமணரிற் புருஷனுக்குரிய முக்கிய ஸம்ஸ்காரமாகிய உபநயநமும், ஸ்திரீக்குரியதாகிய விவாகமும், இன்னும் நமக்குச் செய்யப்படவில்லையே; உபநயநத்திற்குப் பரம அவதியாக விதிக்கப்பட்டிருக்கும் ௧௬-வது பிராயம் சமீபிக்கின்றதே; விவாகத்திற்குரிய காலமும் ஆகின்றதே" என்று மிகவும் அநுதபித்துத் தங்கள் தாய்தந்தையர்களின் இரக்ஷையினின்று நீங்கி, ஸ்வாதந்த்ரியமில்லா அறியாப்பருவத்தில் தங்களுக்கு நேரிட்ட சமுத்திரயாத்திரை, தீபாந்திரவாசம் முதலியவைகளுக்குச் சாஸ்திரம் விதித்திருக்கும் பிராயச்சித்தத்தைத் தங்களாற் செய்விப்பித்துத் தங்களைப்பரிசுத்தர்களாக்கிப் பிராமணஸம்ஸ்காரங்களுக்கு அர்கர்களாகச்செய்ய வேண்டுமென்று மிகவும் மனமுருகி ஸ்ரீமத்ஸ்ருங்கேரி சங்கராசாரியசுவாமிகளவர்களைப் பிரார்த்தித்து வேண்டிக்கொண்டார்கள். அப்பெரியோர் அவர்கள் அநுதாபத்திற்கிரங்கித் தர்மசாஸ்திரப் பிரஜ்ஞையுள்ள தம்மடத்து வித்வத்கோஷ்டியைக்கொண்டு சாஸ்திரபரிசோதனைசெய்வித்து அச்சாஸ்திரத்தால் அக்குழந்தைகளுக்கு விகிதமாயேற்படும் பிராயச்சித்தங்களடங்கிய ஸ்ரீமுகம் பிறப்பித்தார்கள். இப்பிராயச்சித்தங்கள் சாஸ்திரவிகிதமான பிராயச்சித்தங்களே யென்றும் இவைகளால் அக்குழந்தைகள் தோஷம்நீங்கிப் பரிசுத்தர்களாய்ச் சமஸ்தவிதமான ஸவ்வியவகாரங்களுக்கும் அர்கர்களானார்களென்றும் ஸ்ரீமத்ஸ்ருங்கேரி ஸ்ரீமுகத்தையனுசரித்து ஸ்ரீமத் ஆவணிசங்கரமடத்தினின்றும் ஸ்ரீமத் கும்பகோண சங்கரமடத்தினின்றும் பின்னர் ஸ்ரீமுகங்கள் பிறந்தன.

விதிக்கப்பட்ட பிராயச்சித்தம்.

பிராயச்சித்தங்களாவன:—சேதுஸ்நாநம், இராமநாத தரிசனம், ஷ கிருச்சரம், விதிப்படியுள்ள கோதானுதி அநேகதானங்கள், பிராமணபே முதலியவை.

இப்பிராயச்சித்தங்களை அக்குழந்தைகளுக்குச் சேதுவிற் கிரமப் செய்விக்க ஸ்ரீமத்ஸ்ரீங்கேரிமடத்து வித்வத்கோஷ்டியிலொருவராகிய பிரஹ்மஸ்ரீ கோபாலசாஸ்திரிகளென்பவர் நியமித்தனுப்பப்பட்டார். அவர் அக்குழந்தைகளுக்குச் சேதுவில் சகலமும் விதிப்படி நடப்பித்து மடத்திற்கு அவ்விவரத்தை யறிவிக்க மடத்தினின்று, அக்குழந்தைகள் சமஸ்ததோஷமும்நீங்கிப் பரிசுத்தர்களானுர்கள்; சமஸ்தவிதமான சவ்வியவகாரங்களுக்குமர்களானுர்களென்று அநுக்ரகம் உண்டாயிற்று.

இவ்வாறு அநுக்ரகம்பெற்ற குழந்தைகளில் மூத்தவனுகிய குமாரனுக்கு அவனுடைய கசு-வது பிராயத்திற்குள் இராமேசுவரத்திற்குனே ஷை கோபால சாஸ்திரிகள் உபநயநமும் நடப்பித்தார்.

இராமேசுவரத்தினின்றும் திரும்பிவரும் மார்க்கத்தில் அச்சிறுவனும் பெண்ணும் தங்கள் பெரியோரினுத்தரவுப்படி புண்ணியதீர்த்தஸ்நாநம், புண்ணியக்ஷேத்திரவாசம் முதலியவை செய்துகொண்டு இக்கும்பகோணத்திற்கு வந்தார்கள். இவ்விடத்தில் ஸ்மார்த்தர்களில் வேதவித்துக்களாகிய முக்கியமான எல்லாப்பிராமணர்களுடைய அநுஜ்ஞையும் அநுக்கிரகமும்பெற்றுக் காவேரி ஸ்நாநம்செய்து தேவாலயதரிசனங்களும் பண்ணிப் பிராமணஸந்தர்ப்பணையும் செய்தார்கள்.

இதன்பின்னர் இக்கும்பகோணத்திலேயே சென்ற ஆனிமாசத்தில் கஉ-வது பிராயத்திற்குள் பெண்ணுக்கு விவாகம்நடந்தது. அப்பெண்ணின் இளையதாயாரும் (தாயின்தங்கை) அத்தாயின் பர்த்தாவும் கன்னிகாதானம் செய்து கொடுத்தார்கள். இவ்விவாஹ தம்பதிகள் அதிசிஷ்டர்களான பிராமணுேத்தமர்களின் அநுக்ரகம் அடைந்தார்கள். இவ்விவாகசம்பந்தமாய்ச் சேர்க்கப்பட்ட வித்வச்சபைக்குத் திருமதஸ்தர்களிலுமுள்ள, தர்க்க வியாகரண மீமாம்ஸாதி சாஸ்திரபண்டிதர்களும் இருக்கு எஜுஸ் ஸாம வேத பாரங்கதர்களும் அநுஷ்டாதாக்களான அநேகம்பெரியோர்களும் இவ்வூரிலிருந்தும் பிற ஊர்களிலிருந்தும் வந்திருந்தார்கள்.

மேற்சொல்லிய விருத்தாந்தத்தில் நாம் கருத்தில் வைக்கவேண்டியது யாதெனில்:—

ஸ்ரீமத் ஸ்ரீங்கேரி சுவாமிகளவர்கள் சாஸ்திரபரிசோதனையின்மேல் தம் மடத்து வித்வத்கோஷ்டிக்குச் சாஸ்திரவிகிதமென்று தோன்றிய பிராயச்சித்தத் தாற் பரதந்திராவஸ்தையில் ஒருபுருஷக்குழந்தைக்கும் ஒருபெண்குழந்தைக்கும் நேர்ந்த சமுத்திரயாத்திரை முதலிய பாபங்களைப் பரிகரித்து அவர்களைச் சுத்தர்

ளாக்கிச் சவ்வியவகாரத்திற்கு அர்களாகச்செய்தார்கள். இதை அங்கீகரித்து ஸ்ரீமத் கும்பகோணம், ஆவணி சங்கரமடங்களினின்றும் ஸ்ரீமுகங்கள் பிறந்தனவென்பது.

ஸ்ரீமத்ஸ்ரீங்கேரிசுவாமிகளவர்களுடைய யோக்கியதாம்சத்தைக் குறித்துப் பேச நான் அநர்கனாயினும் தெரிந்துகொண்ட இரண்டொரு சங்கதிகளை இவ்விடத்திற் சொல்லவேண்டியிருத்தலால் அவ்வாறு சொல்வதற்கு எனக்கு அனுமதிதரவேண்டுமென்று மிகவும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அந்தஸ்வாமிகள் (தம் பூர்வாச்சிரமத்தில்) அதிப்பிரஸித்தமான வித்வத் பரம்பரையிற் பிறந்தவரென்பதன்றித் தாமே பெரியவித்வான். மகாபெரியவராகிய முன்னிருந்த சுவாமிகளவர்களால் அதிபாலியம்முதலே நன்னெறியிலேயே பயிற்றுவிக்கப்பட்டு வந்தவர்; மேலும் இப்பொழுதிருக்கும் நிலைமையில் புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும், ஒரேவிதமாய் எண்ணுபவர்; ஒருவித இலாபத்தையும் எதிர் பார்ப்பவரல்லர். எப்பொழுதும் சிஷ்டர்களாலும் வித்வத்பிரமுகர்களாலும் சூழப்பட்டுள்ளவர். இம்மஹானின் ஸ்ரீமுகத்தால் நியமிக்கப்பட்ட பிராயச்சித்தம் இவ்வளவு பரியாலோசனையின்மேல் விதிக்கப்பட்டிருக்கிறதென்பதும், அதை விதித்தோர் அது சாஸ்திர சம்மதமானதே யென்பதை இவ்வளவு தூரம் மனப்பூர்வமாயுணர்ந்து சொல்லியிருக்கிறாரென்பதும் அந்த ஸ்ரீமுகபத்திரிகையின் முடிவில் எழுதப்பட்டிருக்கும் மூன்று சுலோகங்களாற் செவ்வையாய் விளங்கும்.

அவற்றின்தாத்பரியம்:

(௧) "தங்களுடைய சகலவிதமான ஹிதாஹித விஷயங்களிலும் பரதந்திரர்களாய்த் தங்கள் போஷகர்களின் ஆதீனர்களான அதிபாலியரானகுழந்தைகளுக்கு நேரிடும்தோஷம் பிராயச்சித்தத்தால் நிவாரணமாகாததாயுமிருக்குமோ?"

(௨) " குழந்தைகளுக்குநேரிட்ட சமுத்திரயாத்திரா முதலியபாபங்கள், சேதுஸ்நாநம், இராமநாததரிசனம், பிராமணபோஜனம் முதலியவைகளால் நிவிர்த்தியாகின்றனவென்பதில், தர்மசாஸ்திரத்தின் சூக்ஷ்மத்தைத் தேர்ந்துணர்ந்தோர் எவர்க்காவது சந்தேகமுமுண்டாகுமோ? "

(௩) "௧௨-வருஷப் பிராயச்சித்தம் விதிக்கப்பட்டுள்ள பிரஹ்மஹத்தியாதி மஹாபாதகங்களுக்கு அப்பிராயச்சித்தத்திற்குப் பிரதிநிதியாக இராமேசுவரஸ்நாநம் பிராயச்சித்தமாகவிதிக்கப்பட்டிருக்க, குழந்தைகளுக்குநேரிட்ட சமுத்திரயாத்திராதோஷமானது சேதுஸ்நாநத்தாற் போகாதென்பதுமுண்டோ?"

இவ்வாறு எழுதப்பட்டுள்ளவற்றைப் பார்த்தும் மாயூரத்தில் ஒருவர், பலர்கூடிய ஒருசபைமத்தியினின்று வாய்கூசாமல் மேற்குறித்தபிராயச்சித்தம் முகதாக்ஷிணியத்தின்நிமித்தம் விதிக்கப்பட்டதேயன்றி, சாஸ்திரசம்மதமானதாக எண்ணித்தீர்மானிக்கப்பட்டதன்றென்று சொன்னார். கட்சி ஆவேசத்தில்

அவர் இவ்வாறு கூறினரென்றே எண்ணுகிறேன். பின்னர் இவ்வதிவார்த்தைக்கு அவர்மனமே அவரை மிகவருத்தியிருக்கலாம். இரண்டொருவர் அச்சபையிற் சங்கராசாரியரின் இந்த ஸ்ரீமுகத்தீர்ப்புக்கு நாம் கட்டுப்பட்டவரல்லரென்று மிகப்பிரதாபமாய்ச் சொல்லிக்கொண்டார்கள். இவ்வாறு கூறியவருங் கூடத் தர்மசாஸ்திரநியாயத்திற்கும் சத்தியத்திற்கும் நாம் கட்டுப்படமாட்டோமென்று ஒருசபையில் வெளிப்படையாய்ச் சொல்ல அஞ்சுவாரென்றே எண்ணுகிறேன். இப்பிராயச்சித்தத்தீர்ப்பை இவ்வாறு நிராகரித்துப்பேசுவது முறையோவென்று சற்று விசாரிப்போம்.

பாபம் இருவகை.

இவ்விருவகைக்கும் இருவகையான பிராயச்சித்தம்.

பிராயச்சித்தப்பிரகரணத்தில்(க)மனுஸ்மிருதி(உ)பராசரமாதவீயம்(௩)யாஜ்ஞவல்கியவிஜ்ஞானேசுவரீயம் (௪) பிருஹஸ்பதிஸ்மிருதி (௫) ஆபஸ்தம்பதர்மம் (௬) போதாயனதர்மம் (எ) கௌதமதர்மம் (அ) வஸிஷ்டதர்மம் (௯) ஹேமாத்திரிமுதலியவைகளெல்லாம், பாபம் ரகஸ்யபாபம் பிரகாசபாபமென இருவகைப்படுமென்றும், ரகஸ்யபாபத்திற்கு ரகஸ்யமாகவே பிராயச்சித்தம் செய்தல் வேண்டும்; பிரகாசபாபத்திற்குப் பிரகாசமாகவே பிராயச்சித்தம் செய்தல்வேண்டுமென்றும் சொல்லுகின்றன.

ரகஸ்யபாபமும் அதன் பிராயச்சித்தமுறையும்.

க. யாஜ்ஞவல்கிய விஜ்ஞானேசுவரீயம், ரகஸ்யப் பிராயச்சித்தப் பிரகரணம், ௩௩-வது பக்கம்.

"செய்பவனுக்குமாத்திரமாவது யாருடைய சகாயமின்றிச் செய்தல் கூடாதோ அப்படிப்பட்டவர்களுக்குங்கூடவாவது தெரிந்தபாபம் ரகஸ்யபாபமெனப்படும்."

உ. போதாயனதர்மம் ௪-ம் பிரச்னம், ௪-ம் அத்தியாயம், க-சூத்திரம்.

"ரகஸ்யப் பிராயச்சித்தமானது பாபஞ்செய்தவனாலேயே விதிக்கப்படவேண்டும்; மற்றவர்கள் விதித்தல் கூடாது."

௩. விஜ்ஞானேசுவரீயம், ரகஸ்யப் பிராயச்சித்தப்பிரகரணம், ௩௩-வது பக்கம்.

"ரகஸ்யபாபமுடையவன் தர்மசாஸ்திரம் தெரிந்தவனானல் பிறருக்குத்தெரிவியாமல் தனக்குநேர்ந்தபாபத்திற்குப் பிராயச்சித்தத்தை அனுஷ்டிக்கவேண்டும். சாஸ்திரம்தெரியாதவனாயின் வேறு யாரோ ஒருவனுக்குப்பிரஹ்மஹத்தியாதி தோஷம்நேர்ந்திருக்கிறது; அதற்கு ரகஸ்யப்பிராயச்சித்த மென்னவென்று வேறொருவன்பொருட்டுக்கேட்பவன் போலவே கேட்டுத் தெரிந்துகொண்டு அனுஷ்டிக்கவேண்டும். ரகஸ்யபாபத்தை ஒருசபையிற்சொன்னால் அப்பாபத்திற்கு அதிகப் பிராயச்சித்தமுண்டு."

௪. ஆபஸ்தம்பதர்மம், க-பிரச்னம், எ-ம் படலம், உக-ம் கண்டம், கரு-ம் சூத்திரம்.

"ஒருவனுக்கு மற்றொருவன் பாபஞ்செய்தானென்று தெரிந்தால் அதைத் தான் முதலில் பிறருக்கு வெளியிடலாகாது. ஆனால் தான் செய்யும் தர்மகாரியங்களில் அந்தப்பாபஞ்செய்தவனை விலக்கக்கடவன்."

ரு. கௌதம தர்மம், உக-ம் அத்தியாயம் கஎ-கஅ-ம் சூத்திரங்கள்.

"ஒருபிராமணன்மேல் குற்றம்சொல்வதினால் குற்றம்சொல்லுகிறவன் குற்றஞ்சொல்லப்படுகிறவனுக்குள்ள பாபத்திற்குச் சமானமான பாபத்தையடைகிறான். குற்றஞ்சொல்லப்படுகிறவன்குற்றமற்றவனேல் அவன் மேலாரோபிக்கப்பட்டதோஷத்திற்கு இரண்டுமடங்கான தோஷம் குற்றஞ்சொல்லுகிறவனையடைகிறது."

யாஜ்ஞவல்கியம், ௩-ம் அத்தியாயம், உஅ௫-ம் சுலோகத்திலும்இக்கருத்தே வெளியிடப்பட்டிருக்கிறது

௬. ஹேமாத்ரி பிராயச்சித்தப் பிரகரணம், மைசூர்ப்பதிப்பு, சகஉ-ம் பக்கம்.

"மனு:—பிரகாசப்படுத்தப்படாத பாபத்தையுடையவன் மந்திரத்தாலும் ஹோமத்தாலும் சுத்தப்படுத்தப்படவேண்டியவன்."

பிரகாசப்பிராயச்சித்தமுறை.

எ. பராசரமாதவீயம் பிராயச்சித்தப்பிரகரணம் ௩சகூ-ம் பக்கம்.

"பிருஹஸ்பதி, யாஜ்ஞவல்கியர்:--பிரகாசதோஷமுடையவன் பரிஷத்சம்மதமான விரதத்தைச்செய்யவேண்டும்."

அ. ஹேமாத்ரி, பிராயச்சித்தப்பிரகரணம், சகஉ-ம் பக்கம்.

"மனு:—பிரகாசபாபங்களுடையவன் பரிஷத் அனுமதியின்மேல் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டும்."

௯. பராசரமாதவீயம், பிராயச்சித்தகாண்ட ஆரம்பம், உ௦௬-ம் பக்கம்.

"பாபஞ்செய்து பச்சாத்தாபம் அடைந்தவனுடைய சித்தங்கலங்கிக்கெட்டுப்போகின்றது. அந்தச்சித்தமானது பரிஷத்தினால் ஏற்படுத்தப்படும் எப்படிப்பட்ட விரதத்தின் அனுஷ்டானத்தினாற் பெரும்பாலும் நிச்சயமாய்ச் சரியாகச்செய்விக்கப்படுகிறதோ அந்தவிரதம் பிராயச்சித்தம்."

க௦. ஹேமாத்ரி, பிராயச்சித்தப்பிரகரணம், சகஉ-ம் பக்கம்.

"தன்பாபத்தைச் சபைக்குப்பிரவித்தப்படுத்துவதினாலும், பச்சாத்தாபத்தாலும், விரதானுஷ்டானத்தாலும், வேதாத்தியயனத்தாலும் பாபஞ்செய்தவன் பாபத்திலிருந்து நீங்குகிறான். தனக்கு நேரிட்டதோஷத்தை எவ்வளவுக்கெவ்வளவு ஒருவன் எடுத்துப்புலம்புகிறானோ அவ்வளவுக்கவ்வளவு பாம்பு சட்டையினின்று நீங்குவதுபோலப் பாபத்தினின்றும் விமோசனமடைகிறான்."

பரிஷத்லக்ஷணம்.

௧௧. பராசரமாதவீயம், பரிஷத் லக்ஷணப்பிரகரணம், ௨௫௭-ம் பக்கம்.

"வேதம் வேதாங்கம் இவைகளையறிந்தவரும் தம்முடையகர்மங்களைச் சரியாய் நடத்திவருகிறவருமாகிய பிராமணருக்குத்தன்பாபத்தைத்தெரிவித்தல்வேண்டும்."

விஜ்ஞானேசுவரர், ஹேமாத்திரி, போதாயனர், வசிஷ்டர், கௌதமர், முதலியோரும் இவ்வாறே சொல்லுகிறார்கள்.

௧௨. வசிஷ்டதர்மம், ௩-ம் அத்தியாயம், ௫-ம் சூத்திரம்.

"வேதம் அறியாது தமக்குரியகர்மங்களைச் சரிவரச்செய்யாது பெயரால்மாத்திரம் பிராமணரென்றுவிளங்குபவர் பல்லாயிரம்பெயர்கள் சேர்ந்தாலும் தர்மசாஸ்திரம்விதிக்க ஒருபரிஷத்தாகார்கள்."

மனுஸ்மிருதி, ௧௨-ம் அத்தியாயம், ௧௧௪-ம் சுலோகத்திலும் இவ்வாறேசொல்லப்பட்டிருக்கிறது.

௧௩. மேற்படி ௭-ம் சூத்திரம்.

"வேதம் நன்றாய்த்தெரிந்த நான்கு அல்லது மூன்று பிராமணர்கள் சொல்வதைத் தர்மசாஸ்திரமாக அவசியம் கொள்ளவேண்டும். வேதப்பிரஜ்ஞையில்லாத ஆயிரம்பெயர்கள் சேர்ந்துசெய்யும்தீர்ப்புத் தர்மசாஸ்திரமாகாது."

௧௪. போதாயன தர்மம், ௧- பிரச்னம், ௧- அத்தியாயம், ௧—கண்டிகை, ௯-ம் சூத்திரம்.

"தர்மசாஸ்திரம் விதிப்பதற்கு ஐந்துபெயர்களிருக்கலாம், மூன்று பெயர்களிருக்கலாம், மறுவற்றவராய் ஒருவரிருந்தாலும்போதும், வேதப்பிரஜ்ஞையில்லாதவர் ஆயிரம்பெயர்களிருந்தாலும் போதாது."

௧௫. கௌதமதர்மம், ௨௮-ம் அத்தியாயம், ௫0, ௫௧-ம் சூத்திரங்கள்.

"தன்ஸ்வகர்மத்தைச் செவ்வையாய்த்தெரிந்து அதை ஆசரித்துவருதலோடு வேதம் அறிந்துமிருக்கிற ஒரு சுரோத்திரியன் செய்யும் தீர்மானத்தைக் கைக்கொள்ளவேண்டியது. ஏனெனில் அப்படிப்பட்டவன் ஒரு பிராணிவிஷயத்திலும் அநியாயமாய் அநுகூலத்திற்காவது பிரதிகூலத்திற்காவது காரணமாகமாட்டான்; சாஸ்திரத்தையே கண்ணாக உடையவனாகையால்."

௧௬. போதாயனதர்மம், ௧-பிரச்னம், ௧-அத்தியாயம், ௧-கண்டிகை, ௧௫-ம் சூத்திரம்.

"தர்மசாஸ்திரம் அறிந்தவன் காலத்தையும், பாபம்செய்தவனுடையபிராயம் அறிவு பலம் சரீரக்கூறு பாபத்தின்தன்மை இவையெல்லாவற்றையும், செவ்வையாய்ப்பரியாலோசனைசெய்து பிராயச்சித்தம் விதிக்கக்கடவன்."

வஸிஷ்ட தர்மம், ககூ-ம் அத்தியாயம், கூ-வது சூத்திரத்திலும் இவ்வாறே சொல்லப்பட்டிருக்கிறது.

மேற்சொல்லிய பிராயச்சித்த நியாயத்தையும் பரிஷத் லக்ஷணத்தையும் என்மேல் தயைசெய்து கேட்டருளிய ஸப்பியர்களுக்கு நான் செய்துகொள்ளும் விஜ்ஞாபனம் யாதெனில்:—

தங்களுடைய அஸ்வாதந்திரியகாலத்தில் தோஷம்நேரிடப்பெற்ற குழந்தைகள் மிகவும் அநுதபித்துத் தங்களுடைய பிரகாசமானபாபத்தை மிகப்பச்சாத்தாபத்தோடு சுவயமே மகாவித்வானும் எப்பொழுதும் வித்வத்பிரமுகர்களால் சூழப்பட்டவருமாகிய அதிசிஷ்டரான ஸ்ரீமத்ஸ்ரீங்கேரிசுவாமிகளவர்களிடத்தில் தெரியப்படுத்திக்கொண்டார்கள். அவர்களும் தம்வித்வத்கோஷ்டியோடு எல்லாவிஷயத்தையும் செவ்வையாய்ப் பரியாலோசனைசெய்து பாபபரிகாரவிரதத்தை (பிராயச்சித்தத்தை) விதித்தார்கள். இத்தீர்மானத்தை நிராகரித்துப்பேசுவது தர்மசாஸ்திரநியாயத்திற்கும் சத்தியத்திற்கும் ஒத்ததோவென்பதைப்பற்றி ஸப்பியர்கள் ஆலோசிக்கவேண்டுமென்பது.

என்புத்திக்கேற்க இத்தீர்மானத்திற்குக் கட்டுப்படமாட்டோமென்பது தர்மசாஸ்திரநியாயத்திற்கும் சத்தியத்திற்கும் கட்டுப்படமாட்டோமென்று சொல்வதையொக்கும்.

இதுநிற்க, சமுத்திரயாத்திரையைக்குறித்துச்சாஸ்திரந்தான் என்னசொல்லுகிறதென்று சற்று விசாரிப்போம்.

ஸமுத்திரயாத்ராதோஷத்தைப்பற்றிய தர்மசாஸ்திரம்.

கஎ. ஹேமாத்ரி, பிராயச்சித்தப்பிரகரணம், காராக்கிருகப்பிரவேசம், கநகூம் பக்கம். (மைசூர்ப்பதிப்பு)

"மூன்றுநாள் சமுத்திரயாத்திரைசெய்தல் ஒருமாசக்காராக்கிருகப்பிரவேசத்திற்குச்சரி. காராக்கிருகப்பிரவேச தோஷக்காரனுக்கு ஸ்நாந சந்தியாவந்தன தேவ பிதுர் தர்ப்பண அத்தியயன ஹோமாதிகள் இல்லாமற்போவதால் அவன் சூத்திரன் தான்."

(குறிப்பு) இவ்விடத்தில் சமுத்திரயாத்திரைக்குப் பிராயச்சித்தம் இன்னதென்றுசொல்லப்படவில்லை.

கஅ. போதாயன தர்மம், பிராயச்சித்தப்பிரகரணம், உ-ம் பிரசனம், க- அத்தியாயம், உ-ம் கண்டிகை, க-முதல் கூ-வரையிலுள்ள சூத்திரங்கள்.

"பதனீயத்தையை உண்டுபண்ணத்தக்க பாபங்களாவன:—

(க) "சமுத்திரயாத்திரை" (உ) "பிராமணசொத்தையோ நம்பிக்கையாய் வைக்கப்பட்ட சொத்தையோ திருடுதல்" (ங) "பூமிவிஷயமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லுதல்" (ச) "விலக்கப்பட்டனவோ படாதனவோவான பதார்த்தங்களை வாணிபஞ்செய்தல்" (ரு) "சூத்திரசேவை" (சு) சூத்திரஸ்திரீயினிடத்தில் புத்திரோத்பாதனஞ்செய்தல்."

இவற்றில் ஏதாவதொருகுற்றத்தைச் செய்பவனுக்குள்ள பிராயச்சித்தம் இன்னதென்றுங்கூறியிருக்கிறார்.

(குறிப்பு) போதாயனதர்மத்திலன்றி வேறொன்றிலும் சமுத்திரயாத்திரைக்குப் பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறதாகவே தெரியவில்லை.

ஹேமாத்ரியில் காராக்கிருகப்பிரவேசப்பிரகரணத்திற் சொல்லப்பட்டுள்ளவசனத்தால் ஸமுத்திரயாத்திரையில் நித்தியகர்மங்களுக்கு வைகல்லியமுண்டாதலின், அதைப் பாதித்தியமுண்டுபண்ணும் குற்றமாகப் போதாயனர் சொன்னதொன்று செவ்வையாய்விளங்குகின்றது. மேலும் ஹேமாத்ரியில், பதிதப்பிராயச்சித்தப்பிரகரணம், ௯௫௦-வது பக்கத்தில் இன்னார்இன்னார் பதிதர்களென்று சொல்லுமிடத்து முதலில் நித்தியகர்மபரித்தியாகியைப் பதிதனென்று சொல்லியிருக்கிறார். இதனாலும் போதாயனர் சமுத்திரயாத்திரைசெய்தவனைப் பதிதனென்று சொன்னதின் நியாயம் விளங்குகின்றது.

கக. ஸ்மிருதிரத்நாகரம், கலிவர்ஜ்யப்பிரகரணம்

"இன்னும் தர்மமறிந்தவர்களின் ஏற்பாட்டையே பிரமாணமாகவுடைய தர்மங்களாவன":-(அநேக தர்மங்களினிடையில் அடியில்வருவன சொல்லப்பட்டுள்ளன.)

"சமுத்திரயாத்திரைசெய்த துவிஜன் (பிராயச்சித்தத்தால்) பரிசுத்தனானாலும் இக்கலிகாலத்தில் சங்கிரகத்திற்கு (சேர்க்கைக்கு) அர்கனல்லன்."

*　　*　　*　　*

"அதிதூரதீர்த்தயாத்திரை இக்கலிகாலத்துக்கூடாது."

*　　*　　*　　*

"ஆபத்காலத்தில் பிராமணனுக்குச்சாஸ்திரம் அநுமதித்திருக்கும் விர்த்தி இக்கலிகாலத்துக் கூடாது."

(கௌதமதர்மம், ஏ-வது அத்தியாயத்தில் "ஆபத்காலத்தில் பிராமணன் க்ஷத்திரியவிர்த்தியை அநுசரிக்கலாம்; அதுகூடாவிடில் வைசியவிர்த்தியை அநுசரிக்கலாம்; அக்காலத்திலும் கந்தம், அந்நம், சிவப்புச்சாயத்துணிகள், பால், அதன்வேறுபாடுகளான தயிர் நெய்முதலியன, கிழங்குகள், பழம், புஷ்பம், மருந்து, தேன், ஜலம், சினைப்பசு, பசுக்கிடாரிக்கன்று முதலியவைகள் விற்றல்கூடாது" என்கிறார்.)

*　　*　　*　　*

"சுவாத்தியாயத்தால் (தன்வேதத்தால்) திரவியந்தேடல் இக்கலிகாலத்துக்கூடாது."

*　　*　　*　　*

"வாயால் நெருப்பை ஊதுவது இக்கலிகாலத்துக்கூடாது."

"பத்துநாள்வரையில் நதியில்வரும் புதுஜலத்தில் ஸ்நானஞ்செய்தல் இக்கலிகாலத்துக்கூடாது."

* * * *

மேற்சொல்லியவாக்கியங்கள் ருஷிப்பிரமாணமுடையவாக்கியங்களல்ல; ஸ்மிருதிப்பிரமாணமுடையவாக்கியங்களுமல்ல; தர்மமறிந்தோரிற்சிலரின்கட்டுப்பாட்டைப் பிரமாணமாகவுடைய வாக்கியங்களென்பது அவற்றின் தலைப்பில்எழுதப்பட்டுள்ள ஸ்மிருதிரத்நாகரவசனத்தால் தெரியவருகிறது. அவ்வாக்கியங்களால் இக்கலிகாலத்துக்கூடாவென்று விலக்கப்பட்டுள்ளவைகளை விலக்காது கைக்கொள்வதினுல் ஒருவனுக்குண்டாகுந்தோஷம் இன்னதென்றுவது அத்தோஷத்திற்குப் பிராயச்சித்தம் இன்னதென்றுவது சொல்லப்படவில்லை. இதுவன்றி முற்கூறியகட்டுப்பாட்டால் விதிக்கப்பட்டுள்ள எல்லாக்காரியங்களிலும் அக்கட்டுப்பாட்டைப் பிரமாணமாகக்கொண்டு நாம் நடந்துவருகிறதாகவும் தெரியவில்லை. ஏனெனில் அக்கட்டுப்பாட்டால் இக்கலிகாலத்துக் கூடாவேன்று விலக்கப்பட்டுள்ளவைகளில் முன்னேடுத்துச் சொல்லப்பட்டவற்றுள் இரண்டொன்றேழிந்த எல்லாக்காரியங்களும் இப்பொழுது ஸகஜமான தினசரியைகளாயிருக்கின்றன.

"சமுத்திரயாத்திரைசெய்த துவிஜன் (பிராயச்சித்தத்தால்) சுத்தனுனுலும் அவனுடையசங்கிரகம் இக்கலிகாலத்துக்கூடாது" என்பது முற்சொல்லிய கட்டுப்பாட்டுவாக்கியங்களில் ஒன்று. இதுவும் மற்றவாக்கியங்களைப்போன்றே ஸ்மிருதிப்பிரமாண ருஷிப்பிரமாணமுடைய வாக்கியமன்றெனினும் தர்மமறிந்தோரால் கூறப்பட்டமையால் பிராமாண்யமுடையதாகவே எண்ணப்படவேண்டுமெனின், யாவராலும் பிரமாணமாகக்கொள்ளப்படும் ஸ்மிருதிவாக்கிய ருஷிவாக்கியங்களின் நியாயத்தையநுசரித்தே இந்தவாக்கியமும் பிறந்திருக்கவேண்டும். பின்னும் இவ்வாக்கியம் சமுத்திரயாத்திரைக்குப் பிராயச்சித்தம் சொல்லும்போதாயனவாக்கியத்தை ஆசிரயித்துநிற்கின்றது (போதாயனதர்மத்திலன்றி வேறொன்றிலும் சமுத்திரயாத்திரைக்குப் பிராயச்சித்தம் சொல்லியிருப்பதாகத்தெரியவில்லையென்பது முன்னர்க்கூறப்பட்டுள்ளது). ஆகையால் இந்தவாக்கியத்தின்தாத்பரியம், சமுத்திரயாத்திரை செய்யும் துவிஜனுக்கு நித்தியகர்மவைகல்யமுண்டாவதால் அவன் பிராயச்சித்தத்தால் சுத்தனுனுலும் இக்கலிகாலத்திற் சங்கிரகத்திற்கு அர்கனல்லனென்று செவ்வையாய்த்தெரிகிறது. ஆகவே யாருக்குநித்தியகர்மங்கள் விதிக்கப்பட்டுள்ளனவோ அவன் அக்கர்மங்களைச் சமுத்திரயாத்திரைமுதலியவற்றின் காரணத்தால் பரித்தியாகஞ்செய்தால் கர்மவைகல்யதோஷம் நேரிடப்பெற்று ஹேமாத்திரி, போதாயனர் முதலியோர்சொல்லியபடி பாதித்தியமடைந்து மேற்சொல்லிய கட்டுப்பாட்டுவாக்கியத்தின்படி சுத்தனுனுலும் இக்கலிகாலத்தில் சங்கிரகத்திற்கு யோக்கியதையற்றவனுகிறுன். அநுபநீதனுக்கு மேற்குறித்த நித்தியகர்மம் விதிக்கப்படவில்லை

யென்பது எல்லாஸ்மிருதிகளாலும் போதாயனர், கௌதமர், வசிஷ்டர் முதலிய ருஷிகள் வாக்கியங்களாலும் எல்லாருக்கும் பிரஸித்தமாகத்தெரிந்தவிஷயமே. இதனால் மேற்சொல்லிய கட்டுப்பாட்டுவசனம் உபநீதன் விஷயத்திலேயே விநியோகமென்பது சித்தமாகிறது.

ஆக்ஷேபம்.

ஆனால் சிலர், துவிஜன் என்கிறபதம் உபநயநமானவனைக்குறிப்பதன்றி உபநயநமாயிருந்தாலும் ஆகாவிட்டாலும் பிராமண ஜாதிசாமான்னியத்தையும் சொல்லும் பதமன்றோ? அவ்வாறிருக்க மேற்சொல்லியவசனத்தில் துவிஜன் என்கிறபதத்தால் பிராமணஜாதிசாமான்னியத்தை அர்த்தஞ்செய்துகொண்டு, இக்கலிகாலத்தில் சங்கிரகம் கூடாதென்றிருப்பதாலும், உபநயநம்செய்துவைத்தல் முக்கியமான சங்கிரகமாகையாலும், மேற்சொல்லிய வசனத்திற்கு 'உபநயநாத்பூர்வம் சமுத்திரயாத்திரைபோன பிராமணனுக்கு உபநயநமே இக்கலியுகத்திற் செய்யலாகாது' என்று என் அர்த்தஞ்செய்யக்கூடாதென்கிறார்கள். அப்படி அர்த்தஞ்செய்தல் முறையன்றென்பதும், தர்மசாஸ்திரத்தின்கருத்துக்கு விரோதமென்பதும் முன்னெடுத்துக்கூறிய தர்மசாஸ்திரவாக்கியங்களாலேயே நன்குவிளங்குமாயினும் அவ்வர்த்தம் சரியன்றென்பதற்கு வேறுஅநேக நியாயங்களுமுள்ளன.

அவற்றுள்,—

முதலாவது.

ஒருவாக்கியத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் ஒருபதத்திற்குப் பல அர்த்தங்களிருந்தால் எல்லா அர்த்தங்களுக்குந்தக்கபடி வாக்கியத்தை எவ்விதத்திலாவதுபொருத்தி அர்த்தஞ்செய்துகொள்வது முறையன்று. ஒருவேளை பல அர்த்தங்கள் பொருந்தும்படியாக இருந்தாலும் அந்தப்பதத்திற்கு இயல்பாயுள்ள அர்த்தம் சரியாய்ப்பொருந்தும்பக்ஷத்தில் அதுதான் உத்தமமான அர்த்தம். இது சாமான்னியநியாயம். துவிஜன் என்கிறபதத்திற்கு இருபிறப்பை அடைந்தவன் (உபநயநமானவன்) என்பது இயல்பானஅர்த்தம் (ஆபஸ்தம்பர், போதாயனர் முதலியோர், பிராமண க்ஷத்திரிய வைசியர்களுக்கு உபநயநம் இரண்டாவது பிறப்பு என்கிறார்கள்). இவ்வர்த்தத்திலேயே அப்பதம் பெரும்பான்மையும் பிரயோகிக்கப்படுகிறது. ஆனால் சிலவேளைகளில் லக்ஷணையால் அப்பதம் இருபிறப்பை அடையக்கூடியவனையும் (உபநயனமாகாதவன்) குறிக்கலாம்; இவ்வர்த்தத்தில் பிராமணனையன்றி க்ஷத்திரிய வைசியர்களைச் சாதாரணமாய்க் குறிக்கிறதாகத் தெரியவில்லை.

அமரம், ௩-வது காண்டம், நாநார்த்தவர்க்கம், ஜாந்தத்தில் "தந்த விப்ர அண்டஜாத்துவிஜா:" என்றிருக்கிறது.

ஹலாயுதம், மேதிநீ இங்கிகண்டுகளிலும் பிராமணன்பெயர்வரிசையில் துவிஜன் என்கிறபதம் காணப்படுவதன்றி க்ஷத்திரியவைசியப்பெயர்வரிசைகளிற் காணப்படவில்லை.

மேற்சொல்லிய அமரம், ஹலாயுதம், மேதிநீ முதலிய நிகண்டுகளால் துவிஜன் என்கிறபதம் பிராமணஜாதிசாமான்னியத்தையன்றி க்ஷத்திரியவைசிய ஜாதிசாமான்னியத்தைச் சாதாரணமாய்க் குறிக்கிறதில்லையென்று தெரிகிறது.

உ0. கௌதம தர்மம், க0-ம் அத்தியாயம், க-சூத்திரத்தில்

"வேதாத்தியயனஞ்செய்தல், யஜ்ஞஞ்செய்தல், தானஞ்செய்தல், இம்மூன்றும் எல்லாத்துவிஜர்க்கும் பொதுவான தர்மங்கள்" என்றும்,

உக. கௌதம தர்மம், அ-ம் அத்தியாயம், கூ-ம் சூத்திரத்தில்

"எல்லாத்துவிஜர்க்கும் விதிக்கப்பட்டுள்ள மூன்று தர்மங்களையும் விடாது செய்துவருகிறவர் வேதம்வந்தவரெனப்படுவர்" என்றும்,

உஉ. கௌதம தர்மம், கஎ-ம் அத்தியாயம் க-சூத்திரத்தில்

"தங்களுடைய தர்மங்களைச் சரியாய்ச்செய்துவருவதற்காகப் புகழப்படும் துவிஜர் கொடுக்கும் ஆகாரத்தை ஒரு பிராமணன் புஜிக்கலாம்" என்றும்

சொல்லியிருக்கிறார். உபநயநத்திற்குமுன் எல்லாத்தர்மசாஸ்திரங்களாலும் வேதாத்தியயநம் விலக்கப்பட்டிருத்தலின், மேற்சொல்லிய கௌதமவசனங்களால் துவிஜன் என்கிறபதம் முதல் மூன்றுவர்ணத்தாரையும் குறிக்குங்காலத்து உபநயநமானவனையே சாதாரணமாய்க் குறிக்கிறதென்று தெரிகிறது.

சமுத்திரயாத்திரையை விலக்கியிருக்கும் வசனமானது முதல் மூன்று ஜாதிக்கும் பொதுவாக ஏற்பட்டுள்ளது. சமுத்திரயாத்திரைக்குப் பிராயச்சித்தஞ்சொல்லிய போதாயனர் சமுத்திரயாத்திரையைப் பதனீயதையை உண்டுபண்ணும் குற்றமென்கிறார்; பதனீயதையோ மூன்றுவர்ணத்தாருக்கும் உள்ளது.

உங கௌதம தர்மம், உக-ம் அத்தியாயம், ச-ம் சூத்திரத்தில்

"பதிதனாதல் என்றால் துவிஜாதிக்குரிய தர்மங்களைச்செய்யும் அதிகாரத்தை இழத்தலென்பது பொருள்" என்கிறார்.

பராசரமாதவீயம், பிராயச்சித்தகாண்டம், எ-ம் சுலோகத்தில் 'பதிதனோடு ஒருவருஷத்திற்குமேல் சம்ஸர்க்கஞ்செய்யும் விப்ரன் பதிதனாகிறான்' என்றுள்ளதற்கு வியாக்கியானஞ்செய்யுமிடத்து, மாதவர் விப்ரன் என்பது க்ஷத்திரியாதிகளுக்கு உபலக்ஷணம் என்கிறார்.

போதாயன கௌதம பராசர மாதவவசனங்களால் பதனீயதை எல்லாத்துவிஜர்களுக்கும் உள்ளதென்பதும், ஆதலினால் பதனீயதையை உண்டுபண்ணும் சமுத்திரயாத்திரை எல்லாத்துவிஜருக்கும் விலக்கப்பட்டுள்ளதென்பதும் விளங்கும். இதுபற்றியே இரகுவம்சத்தில், ச-ம் ஸர்க்கம், கூ0-ம் சுலோகத்தில் 'பார்சீகதேசத்தை ஜயிக்க இரகுமகாராஜா கரைவழியாய்ச்சென்றார்' என்றிருப்பதற்கு வியாக்கியானஞ்செய்த மல்லிநாதர், 'ஜலவழி மிகச்சமீபவழியாயிருந்தும் கரைவழியே என்றார், கப்பல்யாத்திரை நிஷித்தமாகையால்' என்று சொல்லியிருக்கிறார்.

ஆகவே சமுத்திர யாத்திரையைப்பற்றி முதல்மூன்றுவர்ணத்தாருக்கும் பொதுவாயேற்பட்டுள்ள மேற்சொல்லிய கட்டுப்பாட்டுவாக்கியத்தில், துவிஜபதம் மூன்றுவர்ணத்திலும் உபநயநம் ஆனவர் ஆகாதவர் எல்லாரையும் குறிக்கிறதென்பது சாதாரணமான அர்த்தமுமன்று, சரியுமன்று. துவிஜபதத்தின் உபநயநமானவன் என்ற இயல்பான அர்த்தம் இவ்விடத்திற் சரியாய்ப் பொருந்துகிறதென்றும் அதுவே தர்மசாஸ்த்திரத்தின் கருத்திற்கு ஒத்திருப்பதென்றும் தெரிவித்தேன்.

இரண்டாவது.

உச. ஆபஸ்தம்பதர்மம், உ-ம் பிரச்னம், எ-ம் படலம், கடு-ம் கண்டம், உரு, உச, உடு, உசு-ம் சூத்திரங்கள்.

"உபநயநமாகும்வரையில் ஒருவித அசுத்தியும் அவரை (குழந்தைகளை) அணுகாதென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்."

"சாஸ்திரவிதிப்படி உபநயநத்தாற்றான் அவர்கள் தங்கள்தர்மங்களைச்செய்ய அதிகாரம் அடைகிறார்கள்."

"விதிப்படி நடக்கச்சக்தி ஆரம்பிக்குமெல்லை உபநயநமே."

"எல்லா ஸ்மிருதிகளும் இவ்வாறே சொல்லுகின்றன."

உபநயநாத்பூர்வம் ஒருதோஷமுமில்லை யென்பது சிலருடைய அபிப்பிராயமென்றும், ஸ்மிருதிகளெல்லாம் இவ்வாறே சொல்லுகின்றனவென்றும் வெளிப்படையாய் ஆபஸ்தம்பர் சொல்லியிருக்க, முற்சொல்லிய கட்டுப்பாட்டு வாக்கியத்தில் துவிஜபதத்திற்கு உபநயநமாகாதவன் என்று அர்த்தஞ்செய்துகொண்டு, உபநயநமாகாதவன் சமுத்திரயாத்திரை நேரிடப்பெற்றதற்கு என்ன பிராயச்சித்தஞ்செய்துகொண்டு சுத்தனானாலும் உபநயநத்திற்கே அநர்கனாகிறானென்று சொல்வதும் தர்மசாஸ்திரத்திற்கு ஒத்திருப்பதோ?

மூன்றவது.

உடு-விஜ்ஞானேசுவரீயம், பிராயச்சித்தகாண்டம்,சுராபானப்பிரகரணத்தில் (டுடு-ம் பக்கம்.)

உபநயநாத்பூர்வம்சம்பவித்த மத்தியபானாதி சகலதோஷங்களுக்கும் உபநயநத்தால் நிவர்த்தியுண்டாகின்றதென்று மனுசொல்வதாக அனுவாதஞ்செய்கிறார்.

உசு. மனுஸ்மிருதி, உ-ம் அத்தியாயம், உஎ-ம் சுலோகத்திற்கு(கககூ-ம் பக்கம்)

வியாக்கியானஞ்செய்த மேதாதிதி ஒருகுழந்தைக்கு கர்ப்பம், பீஜம் இவைகள் சம்பந்தமான தோஷங்களென்றால் உபநயநம்வரையிலுள்ள எல்லாத்தோஷங்களுமென்றே அர்த்தங்கொள்ளவேண்டுமென்றும், இத்தனையும் உபநயநத்தால் நிவிர்த்தியடையுமென்றுஞ்சொல்லியிருக்கிறார்.

மனு, விஜ்ஞானேசுவரர், மேதாதிதி இவர்கள் சொல்லியதற்கு விரோ

தமாய் மேற்சொல்லிய கட்டுப்பாட்டுவசனம் அநுபநீதனையுங்குறிக்கிறதென்றும் அவனுக்கு உபநயநங்கூடாதென்றும் அர்த்தம்பண்ணுவது சுத்தமாய்ப்பொருந்தாது.

நான்காவது.

உபநயநஸம்ஸ்காரத்திற்குப் பிராமணனுக்குள்ள பாத்தியம் பரம்பராப்பிராப்தமானது; அது ஒருதலைமுறையில் உண்டாகும் குற்றத்தால் நசித்துப்போகக்கூடியதன்றென்பதை அடியில் வரும் வாக்கியங்கள்விளக்கும்.

உஎ. ஆபஸ்தம்பதர்மம், க-பிரச்னம், க-படலம், க-கண்டம், உக, உ௨, உ௩, உ௫, உ௬, உஎ, உ௯-ம்சூத்திரங்கள்.

"பிராமணனுக்கு கசு-ம் பிராயம் பூர்த்தியாவதற்கு முன்பு உபநயநஞ்செய்துவைப்பதால் கர்மவைகல்லியம் உண்டாகிறதில்லை (கசு-ம் பிராயம்வரையில் உபநயநமாகலாம்); கசு-ம் பிராயத்துக்குமேலானால் அவன் இரண்டுமாதகாலம் வேதாத்தியயநம்பண்ணுபவனுக்குரிய நியமத்தோடிருந்து பின்பு உபநயநமாய் ஒருவருஷகாலம் பிரதிதினம் ஸ்நாநஞ்செய்துகொண்டுவந்து அப்பால் வேதாத்தியயனம் ஆரம்பிக்கவேண்டும். எவனுடைய தகப்பனும் பாட்டனும் அநுபநீதர்களோ அப்படிப்பட்டவனும் விரும்புவானானால் அடியிற்சொல்லும் பிராயச்சித்தத்தைச்செய்துகொண்டு உபநயநம் செய்துகொள்ளலாம்."

உ௮. ஆபஸ்தம்பதர்மம், க-பிரச்னம், க-படலம், உ-ம் கண்டம், ௫-முதல் க௦-வரையிலுள்ள சூத்திரங்களில்

தகப்பன், பாட்டன், முப்பாட்டன் இவர்களுக்கு உபநயநமாகாமலிருந்து நான்காம்தலைமுறையிலுள்ளவன் உபநயநம் விரும்புவானானால் அவனும் விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தைச்செய்து உபநயனம்பண்ணிக்கொண்டு கிரமப்படிஉபநீதனையிருப்பவனைப்போல் சகல தர்மங்களும் நடத்தலாம் என்கிறார். வியாக்கியாதாவானவர் நான்காம்பாட்டனுக்கும், ஐந்தாம்பாட்டனுக்கும், அவர்க்கு முந்தியுள்ளவர்களுக்கும் உபநயநமாயிராதபக்ஷத்தில் அதற்குப் பிராயச்சித்தம் இன்னதென்றுசொல்லப்படவில்லையாயினும் அதற்கும் தர்மமறிந்தோர் தக்கபிராயச்சித்தத்தை விதிக்கக்கடவர் என்று சொல்லுகிறார்.

உ௯. ஆபஸ்தம்பதர்மம், க-பிரச்னம், க௦-ம் படலம், உ௯-ம் கண்டம், அ, ௯, கக-ம் சூத்திரங்கள்.

"அபிசஸ்தர்கள் (வேதம்வந்தபிராமணனைக்கொன்ற மகாபாதகி முதலியபலர்: ஆபஸ்தம்பதர்மம், க-பிரச்னம், ௯-ம் படலம், உ௪-ம் கண்டம், ௬-எ-அ-௯-ம் சூத்திரங்களிற் காண்க) கிராமத்துக்கு வெளியிற் குடிசை கட்டிக்கொண்டு வசிக்கவேண்டும். அத்தியயநம், யஜனம் முதலியவைகள் ஒருவருக்கொருவர் செய்வித்துக்கொள்ளவேண்டும், தங்களுக்குள்ளேயே விவாகம் முதலானவை செய்துகொள்ளல்வேண்டும். அவர்களுக்குப் புத்திரர்கள்பிறந்தால் அப்புத்திரர்களைப்பார்த்து அவர்கள் பின்வருமாறு சொல்லக்கடவர்: "எங்கள் கூட்டத்தினின்றும் புறத்துப்போங்கள்; ஏனெனில் ஆரியர்கள், குற்றத்தையொ

கள் மேற்சமத்தி உங்களைத்தங்கூட்டத்தாருள் சேர்த்துக்கொள்வார்கள். இதன் உண்மை இவ்வுதாரணத்தால் விளங்கும்: அவயவங்கள் குறைந்தவன் அவயவங்கள் பூரணமாயுள்ள புத்திரனைப்பெறுகிருன்.''

ஹரதத்தர், வியாக்கியானத்தில் ''இம்மாதிரியாகவே, தன் பாத்தியத்தை இழந்தமனிதன் தன் (ஜாதி) பாத்தியத்தைப் பூரணமாகவுடையபுத்திரனைப் பெறக்கூடும்'' என்கிருர்.

௬0. போதாயனர், உ-ம் பிரச்னம், க-அத்தியாயம், உ-ம் கண்டிகை.

கஅ, கக, உ0-ம் சூத்திரங்களில் மேற்சொல்லிய ஆபஸ்தம்பர் அபிப்பிராயத்தையே சொல்லுகிருர்.

தகப்பன், பாட்டன், முப்பாட்டன் அநுபநீதர்களாகவிருந்தாலும் நான்காம் தலைமுறையிலுள்ளவன் உபநயநஞ்செய்துகொள்ளலாமென்று ஆபஸ்தம்பர் சொல்லியிருக்கும்பொழுதும், பிரஹ்மஹத்தியாதிமகாபாதகங்கள்செய்த அபிசஸ்தர்களின் குழைந்தைகளையுங்கூட ஆரியர்கூட்டத்துள் சேர்க்கலாமென்று மேற்சொல்லிய ஆபஸ்தம்பபோதாயனதர்மங்கள் சொல்லும்பொழுதும் கலிவர்ஜ்யக்கட்டுப்பாட்டுவாக்கியத்தில் துவிஜ சப்தத்திற்கு உபநயநாத்பூர்வமென்று அர்த்தம்பண்ணிக்கொண்டு சமுத்திரயாத்திரைசெய்தகுழந்தை உபநயநாதிசம்ஸ்காரங்களுக்கு அநர்கனென்று சொல்வதுந்தகுமோ?

ஐந்தாவது.

௬க. கௌதமதர்மம், உ-ம் அத்தியாயம், க-சூத்திரத்தில்

''உபநயநத்திற்குமுன் இஷ்டம்போல் பேசலாம், நடக்கலாம், புஜிக்கலாம், அதனுல் ஒரு தோஷமுமில்லை'' என்றிருப்பதற்கு வியாக்கியாதாவானவர், இது சுராபானதிகளைநீக்கிச் சொன்னவிஷயமென்றும், சுராபானத்திற்குக் குழந்தைக்கும் பிராயச்சித்தமுண்டென்றும், வேறுசிலரின் அபிப்பிராயப்பிரகாரம், மற்றப்பாபங்களுக்குங்கூட ஐந்து பிராயத்துக்குமுன் ஒரு பிராயச்சித்தமும் வேண்டியதில்லையென்றி ஐந்துபிராயத்துக்குமேல் பதினொருபிராயம்வரையில் கால்பிராயச்சித்தமுண்டு; அதைக் குழந்தைக்காகப்பிதாவாவது சுகிர்த்தாவதுசெய்யவேண்டும். பதினொன்றுக்குமேல் பதினைந்துபிராயம்வரையில் அரைப்பிராயச்சித்தமுண்டு என்றும் சொல்லுகிருர்.

சுராபானதிமகாபாதகங்களுக்குக் குழந்தையாயிருந்தாலும் பிராயச்சித்தம் வேண்டுமென்று சொன்னவர் அப்பாதகவிஷயத்திலுங்கூட உபநயநத்தை நிஷேதிக்கவில்லை.

ஆகவே மேலெடுத்துக்காட்டியபடி துவிஜர்களுக்குப்பொதுவாயேற்பட்டிருக்கும் கலிவர்ஜ்யக்கட்டுப்பாட்டுவாக்கியத்தில் (க) துவிஜன் என்கிறபதத்திற்கு முதல் மூன்றுவர்ணத்தாரையுங்குறிக்கும்பொழுது உபநயநமானவன் என்ற இயல்பான அர்த்தமே சா[illegible]ரணமாய்வழங்கும்அர்த்தமாயிருப்பதாலும்

அவ்வர்த்தமே வாக்கியத்திற்குப் பொருத்தமாயிருப்பதன்றிச் சாஸ்திரத்தின் கருத்துக்கும் ஒத்திருப்பதாலும், (உ) ஆபஸ்தம்பர் உபநயநாத்பூர்வம் ஒருதோஷமுமில்லையென்பது சிலரின் அபிப்பிராயம்; இவ்வாறேஎல்லாஸ்மிருதிகளும் கூறுகின்றனவென்று சொல்லியிருத்தலாலும், (ஈ) மனு, விஜ்ஞானேசுவரர், முதலியோர் உபநயநத்திற்குமுன் உண்டாகும் தோஷங்களுக்கெல்லாம் உபநயநமே பிராயச்சித்தமென்று சொல்லியிருத்தலாலும் (ச) ஆபஸ்தம்பர், உபநயநஸம்ஸ்காரம் பிராமணனுக்குப் பரம்பராப்பிராப்தமானதென்பதுவிளங்கத் தகப்பன் பாட்டன் முப்பாட்டன் அநுபநீதர்களாயிருந்தாலுங்கூட நான்காம்தலைமுறையிலுள்ளவன் விருப்பமுண்டானால் பிராயச்சித்தஞ்செய்துகொண்டு உபநயநம்செய்து கொள்ளலாமென்று சொல்லியிருத்தலாலும், ஆபஸ்தம்பரும் போதாயனரும் அபிசஸ்தர்களின் புத்திரர்களைக்கூட ஆரியர்களோடு ஸவ்வியவகாரிகளாகச்செய்து கொள்ளலாமென்று சொல்லியிருத்தலாலும், (ரு) கௌதமசூத்திரவியாக்கியாதா சிசுக்களுக்குங்கூடச் சுராபானத்திற்குப் பிராயச்சித்தமுண்டென்று சொல்லியும் அந்தப்பாபத்திற்காக உபநயநத்தை நிஷேதிக்கவில்லையாகையாலும் மேற்சொல்லிய கலிவர்ஜ்யக்கட்டுப்பாட்டுவாக்கியமானது தர்மமறிந்தோராற்சொல்லப்பட்டதாதலினாற் பிராமாண்யமுடையதென்று நாம் அதை ஒப்புக்கொள்ளும்வரையில் மனு, கௌதமர், போதாயனர், ஆபஸ்தம்பர், மேதாதிதி, விஜ்ஞானேசுவரர்முதலிய தர்மசாஸ்திரகர்த்தர்கள் சொல்லிய அபிப்பிராயத்திற்கும் நியாயத்திற்கும் விரோதமாய் அக்கட்டுப்பாட்டு வாக்கியத்திற்குஅநுபநீதன் ஸமுத்திரயாத்திரையால் தனக்குரிய உபநயநபாத்தியத்தை இழந்துவிடுகிறனென்று அர்த்தஞ்செய்தல் நமக்குமுற்றிலும் தகாதகாரியம். ஆகையால் அவ்வாக்கியமானது சமுத்திரயாத்திரையால் நித்தியகர்மவைகல்லியமுண்டாகக்கூடிய துவிஜனையே (உபநீதனையே) குறிக்கிறதென்று அர்த்தஞ்செய்யவேண்டியது அத்தியாவசியகமாக இருக்கிறது.

ஸமுத்திரயாத்திரைவிஷயமாக மேற்சொல்லப்பட்டுள்ள எல்லாவற்றாலும் ஸமுத்திரயாத்திரையைப்பற்றி மூன்றுவசனங்களேயுள்ளனவென்பதும், அவற்றுள் ஹேமாத்திரியில் ஸமுத்திரயாத்திரைக்குப் பிராயச்சித்தம் ஒன்றுஞ்சொல்லாமல் மூன்றுநாள் ஸமுத்திரயாத்திரையானது தோஷமுடையது ஒருமாசக் காராக்ருகப்பிரவேசத்திற்குச் சரியானதென்று சொல்லியிருக்கிறானென்பதும், போதாயன தர்மத்தில் ஸமுத்திரையாத்திரை பதநீயதையை உண்டுபண்ணத்தக்க தோஷமென்றும், அதற்குப்பிராயச்சித்தம் இன்னதென்றுஞ் சொல்லியிருக்கிறானென்பதும், எந்தக்கட்டுப்பாட்டை நாம் மீறி அக்கட்டுப்பாட்டால் இக்கலிகாலத்துக்கூடாவென்று விலக்கப்பட்டுள்ளவையிற் சிலவற்றைவிலக்காது கைக்கொண்டிருக்கிறோமோ, எக்கட்டுப்பாட்டு வாக்கியத்தை மீறிநடப்பதற்குப் பிராயச்சித்தமொன்றும் விதிக்கப்படவில்லையோ அப்படிப்பட்ட கட்டுப்பாட்டு வாக்கியங்களில் ஒன்றாக "ஸமுத்திரயாத்திரைசெய்த துவிஜன் சுத்தனானாலும் சங்கிரகத்திற்கு இக்கலிகாலத்தில் அருகனல்லன்" என்றவாக்கியம் கலிவர்ஜ்யப் பிரகரணத்திற் சொல்லப்பட்டுள்ளதென்பதும், ஸமுத்திரயாத்திரையைப்பற்

றிய இம்மூன்று வாக்கியங்களும் நித்திய கருமத்திற்கு வைகல்லியமுண்டாகு மிடத்தேதான் விநியோகமென்று சாஸ்திரத்தாலும் யுக்தியாலும் ஏற்படுகிறதென்பதும் செவ்வையாய்விளங்குகின்றன.

சமுத்திரயாத்திரைசெய்த பெண்ணைப்பற்றியது.

பரதந்தராவஸ்தையில் உபநயநாத்பூர்வம் சமுத்திர யாத்திரைநேரிடப்பெற்ற புருஷக்குழந்தையைப்பற்றி இதுவரையில் விசாரித்தோம். அந்த அவஸ்தையில் விவாஹாத்பூர்வமுள்ள பெண்குழந்தையைப்பற்றி அதிகமாய்ச்சொல்லவேண்டியது அநாவசியகம்.

கூஉ. யாஜ்ஞவல்கிய விஜ்ஞானேசுவரீயம், பிராயச்சித்தப் பிரகரணம், கூ-ம் அத்தியாயம், உகூக - ம் சுலோகம், கூடு-ம்பக்கம்.

"உபவாசம்செய்தவளும் தகப்பனுடையசொத்தொன்றையும் அடையாதவளுமாகிய பதிதனுடைய பெண்ணைக் கலியாணம் செய்யலாம். ஆனல் பதிதனுகிய தகப்பனிடத்திலிருந்து அவளைத் தானம் வாங்கக்கூடாது. பிருஹந்நாரதீயம்:—(தகப்பன்கொடுத்த)வஸ்திரமில்லாதவளும், அகோராத்திரம் உபவாசஞ்செய்தவளும், காலையில் வெளுத்த அகதவஸ்திரம் தரித்தவளும், நான் அவர்களுடையவளல்லள்; அவர்கள் என்னுடையவர்களல்லரென்று மூன்றுதரஞ்சொல்லுகின்றவளுமாகிய பதிதனுடைய பெண்ணைத் தீர்த்தத்திலாவது அந்நியக்ருகத்திலாவது கலியாணஞ்செய்தல்வேண்டும்."

கூகூ.வசிஷ்டதர்மம் கரு-ம் அத்தியாயம், ருக, ருஉ, ருரு-ம் சூத்திரங்கள்.

"பதிதனுக்கு உத்பந்நன் பதிதன்; இதற்கு ஸ்திரீ விலக்கு, அவள்பிறனை அடைகிறவளாகையால். அவளை (தகப்பனுற் கொடுக்கப்பட்ட) ஒருபொருளுமில்லாத ஸ்திதியில் விவாஹஞ்செய்தல் வேண்டும்."

மனு, இரண்டாவது அத்தியாயம், உருஅ-வது சுலோகத்தில் இவ்வாறே சொல்லுகிறார்.

யாஜ்ஞயவல்கியர், மனு, பிருஹந்நாரதர், வஸிஷ்டர் இவர்கள் சொல்லியபடி பதிதனுக்குப் பிறந்த பெண்ணையும் ஸத்பிராமணன் விவாஹஞ் செய்துகொள்ளலாம்.

நான்சொல்லவந்தபெண்ணோ தாய்தந்தையர்களுக்குப் பாதித்தியம் வருவதற்குமுந்திப் பிறந்தபெண்; அஸ்வாதந்திரியமான ஐந்து பிராயமாகிய அறியாப்பருவத்தில் ஸமுத்திரயாத்திரை நேரிடப்பெற்றதற்காக ஸ்ரீமத் ஸ்ரீங்கேரி ஸ்வாமிகளவர்கள் ஸ்ரீமுகப்படி பிரஹ்மஹத்தியாதிகளுக்குப் பிராயச்சித்தமாக விதிக்கப்பட்டுள்ள ஸேதுஸ்நானமுதலிய கடினமான பிராயச்சித்தங்கள் செய்விப்பிக்கப்பெற்ற பெண்; ஆகையால் இப்பெண்விஷயத்தில் ஸமுத்திரயாத்திராதோஷ ஸந்தேகமேயில்லையென்பதும், ஸர்வதோஷ பரிகாரமான ஸேதுஸ்நாநத்தின் பின்பு இப்பெண் நிர்மலையாய் விவாஹாதி ஸமஸ்த ஸவ்வியவஹாரங்களுக்கும் யோக்கியதையோடிருப்பவளென்பதும் எல்லாருக்கும் எளிதில் விளங்கக்கூடிய விஷயங்களேயாம்.

ஆகவே ஸமுத்திரயாத்திரை பதநீயதையை உண்டுபண்ணத்தக்க தோஷமென்று விலக்கியிருக்கும் வசனங்களிலொன்றும் உபநயநாத்பூர்வமுள்ள புருஷக்குழந்தையையும், விவாஹாத்பூர்வம் (ஐந்துபிராயமாகிய அறியாப் பருவத்து) உள்ள பெண்குழந்தையையும் ஸம்பந்தப்படுத்தாதேன்பது நிச்சயமாய்த்தெரிகிறது.

ஆகிலும் ஸமஸ்த தோஷவிஷயத்திலும் ஐந்து பிராயத்திற்குமேற் பதினைந்துபிராயத்திற்குட்பட்ட குழந்தைகளுக்கும் அற்பதோஷமுண்டு; பிராயம் ஐந்திற்குமேல் பதினொன்றுவரையில் அத்தோஷத்திற்குக் கால்பிராயச்சித்தம்; பதினொன்றுக்குமேல் பதினைந்துவரையிற் பாதிப்பிராயச்சித்தமென்று சிலர் அபிப்பிராயப்படுதலால் ஸமஸ்ததோஷ பரிகாரார்த்தமாக ஸ்ரீமத் ஸ்ரீங்கேரி மடத்தினின்றும் ஸேதுஸ்நாநம், இராமநாததரிசனம், ஸஹஸ்ரகிருச்சரம், விதிப்படியுள்ள கோதானுதி அநேகதானங்கள் பிராமணபோஜனமுதலியன பிராயச்சித்தங்களாக விதிக்கப்பட்டன.

இப்பிராயச்சித்தம், ஸமுத்திரயாத்திரா தோஷத்திற்காகக் குழந்தைகளுக்கு இக்கலிகாலத்தில் உசிதமாய் ஏற்படும் பிராயச்சித்தந்தானே? இது ஸ்மிருதி ஸம்மதமானது தானே? என்று சற்று

விசாரிப்போம்.

ருச. ஹேமாத்திரி, பிராயச்சித்தப்பிரமாணப் பிரகரணம், ௪0ரு, ௪0எ-ம் பக்கங்கள்.

"கலிகாலத்து ஆபத்து அதிகமானபடியாலும், அநிவார்யமாய்ப் பாபம்வந்துசேருமாகையாலும், ஒவ்வொரு நிமித்தத்திற்கும் தனித்தனியே பிராயச்சித்தஞ்செய்வது அஸாத்தியமாகையாலும் சரீரம் அஸ்திரமாகையாலும் பாப பலத்தை அனுபவிக்குங்காலத்தில் நெடுங்காலங்கோரமாயும் கடினமாயுமுள்ள நரகங்களின் வேதனை சகிக்க முடியாதாகையாலும் பாபத்திற்குப்பயந்து பச்சாத்தாபங்கொண்டபுருஷனுலே ஓரோகாலத்தில் ஸகலபாபமும் போகத்தகுந்த பிராயச்சித்தம் செய்யத்தக்கது.

ருடு. முன் பரிஷத் லட்சணம் சொல்லுமிடத்து எடுத்துக்கூறிய வசனம். போதாயனதருமம், க-பிரச்நம், க-அத்தியாயம் க-கண்டிகை கடு-ம் சூத்திரம்.

"தர்மசாஸ்திரமறிந்தவன் காலத்தையும் பாபஞ்செய்தவனுடைய பிராயம் அறிவு பலம் சரீரக்கூறு பாபத்தின் தன்மை இவையெல்லாவற்றையும் செவ்வையாய்ப் பரியாலோசனைசெய்து பிராயச்சித்தம் விதிக்கக்கடவன்."

கௌதமர், கஉ-ம் அத்தியாயம், டுக-ம் சூத்திரத்திலும், மனு, எ-ம் அத்தியாயம், கசு-ம், சுலோகத்திலும், அ-ம் அத்தியாயம், கஉசு-ம் சுலோகத்திலும், யாஜ்ஞ்யவல்கியர், க-அத்தியாயம், ருசுஎ-ம் சுலோகத்திலும் இதே அபிப்பிராயத்தைச் சொல்லுகிறார்கள்.

௩௯. கௌதமதர்மம், பிராயச்சித்தப்பிரகரணம், ௧௯-ம்அத்தியாயம்,௧௪-ம் சூத்திரம்.

"எல்லாப்பர்வதங்களும், எல்லாநதிகளும், புண்ணியஸ்தலங்களும், ருஷியாசிரமங்களும், பசுக்கொட்டில்களும், தேவாலயங்களும், பாபத்தைப்போக்கடிக்கும் இடங்களாம்."

